## சுருக்கம்

வணிகவரித்துறை – சீரிய முறையில் செயல்படும் வணிகவரித்துறை அலுவலர்களுக்கு ஊக்கத்தொகை பரிசு வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்பட்டன – திருத்திய ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (எப்1) துறை

அரசாணை (நிலை) எண். 26

நாள்: 22.02.2012.
மாசி 10,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை)எண்.151, வணிகவரித் (எப் 1) துறை, நாள் 5.11.2003.
2. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.வரைவுக்குழு–I/44869/2010, நாள் 21.12.2010, 14.2.2011 மற்றும் 5.9.2011.

-------

**ஆணை:**

2003-2004-ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறை மானியக் கோரிக்கை (கோரிக்கை எண்.10) விவாதத்தின் போது, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, வணிகவரித்துறையில் வரிவிதிப்புப் பிரிவு மற்றும் செயலாக்கப்பிரிவு ஆகியவற்றில் தலா மூன்று நபர்கள் வீதம், சீரிய முறையில் பணியாற்றும் ஆறு அலுவலர்களுக்கு ஊக்கத் தொகைப் பரிசாக தலா ரூ.25,000/– வீதம் வழங்குவதற்கும், அச்செலவினத்திற்கான நிதி ஒதுக்கத்திற்கும், தகுதி வாய்ந்த அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க குழு ஒன்று அமைத்தும் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் தமது அறிக்கையில், வணிகவரித்துறை சோதனைச் சாவடி மற்றும் சுற்றும் குழுக்களில் பணிபுரியும் அலுவலர்கள் செயலாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவ்விருவகை அலுவலர்களையும் ஊக்குவிக்கும் வகையில் தலா ஒரு பரிசு வீதம் கூடுதலாக இரண்டு ரொக்கப் பரிசுகள் வழங்கலாமென பரிந்துரை செய்துள்ளதுடன், அரசாணை (நிலை) எண்.71, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 30.7.2008 ல் தமிழ்நாடு வணிகவரிப் பணி மற்றும் தமிழ்நாடு வணிகவரி சார்நிலைப் பணிகளின் கீழ்வரும் பதவிப் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளபடியால், அதற்கிணங்க ரொக்கப்பரிசு வழங்குவதற்குரிய பதவிகளின் பெயர்களில் மாற்றம் செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் எட்டு ரொக்கப் பரிசுகளுக்கு தலா ரூ.25,000/– வீதம் மொத்தம் ரூ.2,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கோரியுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாமென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு பகுதி மாற்றாக(in partial modification), வணிகவரித்துறையில் சீரிய முறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை பரிசுகளின் எண்ணிக்கையினை கீழ்க்கண்டவாறு எட்டு பரிசுகளாக நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

(அ) வரி விதிப்புப் பிரிவு :-

(1) ஒரு துணை ஆணையர் (விரைவு வழி வரிவிதிப்பு)

(2) ஓர் உதவி ஆணையர் (வரிவிதிப்பு)

(3) ஒரு வணிகவரி அலுவலர் (வரிவிதிப்பு)

(ஆ) செயலாக்கப் பிரிவு :-

(1) ஓர் உதவி ஆணையர் (செயலாக்கம்)

(2) ஒரு வணிகவரி அலுவலர் (செயலாக்கம்)

(3) ஒரு வணிகவரி அலுவலர் (சுற்றும் குழு)

(4) ஒரு துணை வணிகவரி அலுவலர் (சுற்றும் குழு)

(5) ஒரு துணை வணிகவரி அலுவலர் (சோதனைச் சாவடி)

4. மேற்கண்ட எட்டு அலுவலர்களுக்கு ஊக்கத்தொகைப் பரிசுகளுக்கு ஆகும் செலவுக்கென ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2040-00-விற்பனை, வணிகம் முதலான வரிகள்–001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I. திட்டத்தில் சேராதது – AA. தலைமையிடப் பணியாளரமைப்பு–59. பரிசுகளும் வெகுமதிகளும்."
[த.தொ.கு. 2040–00–001–AA-5903]

5. மேலே, பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி, 2011–2012–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள வணிகவரி ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலவினத்தை 2011–12–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக உரிய கருத்துருவை நிதி(வ.செ.பொது–II) துறைக்கு நேரடியாக, தவறாமல் உரிய நேரத்தில் அனுப்பிவைக்குமாறு வணிகவரி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.5137/ நிதி/2012, நாள் 14.02.2012 –இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1639. (ஆயிரத்து அறுநூற்று முப்பத்தொன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலீவால்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு).

நகல்
அனைத்து இணை ஆணையர்கள்(வணிகவரி)
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)
நிதித் (வருவாய்/வ.செ. பொது–II) துறை, சென்னை–9.
அமைச்சர்(வணிகவரி(ம)பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

23/2/12
பிரிவு அலுவலர்

23.02.12